# UNDERSTANDING CEDAW
# சீடோவைப் புரிந்து கொள்ளல்




*Published by*
*Women's Education & Research Centre*
பெண்கள் கல்வி ஆய்வு
நிறுவன வெளியீடு

*Funded by*
*Shakthi Gender Equity Project*
*of Canadian International*
*Development Agency*
கனேடிய சர்வதேச அபிவிருத்தி
முகவரின் சக்தி பால் சமத்துவ
செயற்திட்டத்தின்நிதி உதவி
கொண்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNDERSTANDING CEDAW

*The Convention on the*
*Elimination of all forms of*
*Discrimination Against Women*

## சீடோவைப் புரிந்துகொள்ளல்

பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சமான பாகுபாட்டு வடிவங்களை அகற்றும் பொருட்டு உருவான ஒப்பந்த உடன்படிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published in 2003

2003இல் வெளியிடப்பட்டது.

Women's Education & Research Centre
58, Dharmarama Road,
Colombo 6.
Tel: 2595296, 2596826 Fax: 2596313
e-mail: womedre@sltnet.lk

பெண்கள் கல்வி, ஆய்வு நிறுவனம்
58, தர்மராம வீதி, கொழும்பு 6
தொலைபேசி : 2595296, 2596826
தொலைநகல் : 2596313
மின்னஞ்சல் : womedre@sltnet.lk

This publication is funded by the Shakthi Gender Equity Project of the Canadian International Development Agency (CIDA)

கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவரின் சக்திபால் சமத்துவ செயற்திட்டத்தின் நிதி உதவியுடன் அச்சிடப்பட்டது.

Printed by
Karunaratne & Sons Ltd
67, UDA Industrial Estate
Katuwana Road
Homagama.

அச்சுப் பதிவு
கருணாரத்ன அன்ட் சன்ஸ்
67, UDA கைத்தொழிற்பேட்டை
கட்டுவான வீதி
ஹோமாகம

Free Distribution

இலவச விநியோகத்திற்காக

ISBN 955-9261-28-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***Drafting and Translation:*** *Ramani Jayasundere, Attorney-at-Law*
வரைவும், ஆங்கில மொழிபெயர்ப்பும் ரமணி ஜயசுந்தர - சட்டத்தரணி

***Illustration:*** *K. W. Janaranjana, Attorney-at-Law*
தமிழாக்கம் சோ.பத்மநாதன்

**விளக்கச் சித்திரம்**
கே.டபிள்யு.ஜனரஞ்ஜன - சட்டத்தரணி

**ஆலோசகர்**
பேராசிரியர் சாவித்திரி குணசேகர
கலாநிதி செல்வி திருச்சந்திரன்

***Project Committee***

*Prof. Tressie Leitan*
*Dr. Subhangi Herath*
*Prof. Ramani Jayathilleke*
*Dr. Mario Gomez, Attorney-at-Law*
*Ms. Shyamala Gomez, Attorney-at-Law*
*Ms. Rocky Ariyaratne, Attorney-at-Law*
*Ms. Renuka Senanayake, Attorney-at-Law*

**கருத்திட்டக் குழு**

பேராசிரியர் ட்ரெஸி லெய்ற்றன்
கலாநிதி சுபாங்கி ஹேரத்
பேராசிரியர் ரமணி ஜயதிலக
கலாநிதி மறியோ கோமஸ் - சட்டத்தர
சியாமளா கோமஸ் - சட்டத்தரணி
றொக்கி ஆரியரத்ன - சட்டத்தரணி
ரேணுகா சேனநாயக்க - சட்டத்தரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Preface

UNDERSTANDING CEDAW, we feel is a timely need in view of the local and international implications it has for the State and civil society members. That this document exists and has come into circulation is something that many people are not even aware of. Those who did know about it have treated it as any other document of the UN, which has to be kept on the shelf for reference purposes. The need to have this document circulated, so that its contents can become useful is one reason that motivated us into undertaking this project. The other was, the need for this document to be retrieved from the legal terminologies into simplified language. We have done just that for the benefit of all the people in Sri Lanka.

We thought it was a good idea to reach out to the students first so we have brought out translations in Sinhala and Tamil too. (The Tamil document is being published separately).

There are many who helped us in this project. We want to place on record the services rendered by them. We thank Ramani Jayathilleke, Subhangi Herath, Tressie Leitan, Mario Gomez and Attorneys at Law - Shyamala Gomez, Rocky Ariyaratne and Renuka Senanayake.

Our special thanks go to Ramani Jayasundere (Attorney at Law) for drafting and designing the handbook and to K. W. Janaranjana (Attorney at Law) for the meaningful illustrations. We thank Prof. Savitri Goonesekera who gave her comments on the document, which we have incorporated. We thank the Shakthi Gender Equity Project of the Canadian International Development Agency (CIDA) for funding the publication of this book.

Finally we thank our printers Karunaratne and Sons Ltd. for the lay out and printing of the handbook.

**Selvy Thiruchandran**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

சீடோவைப் புரிந்துகொள்ளல் என்பது, உள்நாட்டு, சர்வதேச உள்ளீடுகளின் நோக்கில் அரசுக்கும், குடிசார் சமூக உறுப்பினர்களுக்கும் அத்தியாவசியமானதொரு தேவையாகும். இப்படியொரு ஆவணம் இருப்பது பலருக்குத் தெரியாது. இது பலரின் பார்வைக்கு எட்டுவதுமில்லை. தெரிந்தவர்கள் கூட ஐ.நா.வின் ஏனைய ஆவணங்களைப் போல இதுவும் ஓர் உசாத்துணை நூலாக, புத்தக அலுமாரியில் வைக்கப்பட வேண்டியதெனக் கருதுகிறார்கள். இவ்வாவணத்தைப் பரந்த அளவில் அறிமுகப்படுத்துவதின் மூலம், இதன் உள்ளடக்கம் எல்லோருக்கும் பயன்தரவேண்டும் என்ற நோக்கமே நாம் அத்திட்டத்தைப் பொறுப்பேற்பதற்குக் காரணம். இன்னொரு நோக்கமும் உண்டு. அது ஆவணத்தில் உள்ள கடினமான சட்ட சம்பந்தமான விடயங்களை விளக்கி எளிமைப்படுத்துவதாகும்.

முதலில் மாணவர்களை இது சென்றடைவது நன்மை பயக்கும் என்று நாம் கருதியதால் சிங்களத்திலும், தமிழிலும் மொழிபெயர்ப்புகளைச் செய்துள்ளோம்.

இத்திட்டத்தில் எமக்கு உதவியோர் பலர். அவர்களுடைய சேவைகளையும், பதிவு செய்ய விரும்புகிறோம். ரமணி ஜயதிலகா, சுபாங்கி ஹேரத், ட்ரெஸி லெய்ற்றன், மரியோ கோமஸ், சட்டத்தரணிகள் சியாமளா கோமஸ், றொக்கி ஆரியரத்ன, ரேணுகா சேனநாயக்க ஆகியோருக்கு எமது நன்றிகள்.

இக்கையேட்டை வரைந்து வடிவமைத்த சட்டத்தரணி ரமணி ஜயசுந்தரவுக்கும், அர்த்தமுள்ள விளக்கப் படங்களை வரைந்த சட்டத்தரணி கே.டபிள்யு. ஜனரஞ்சனவுக்கும் எமது விசேட நன்றிகள் உரித்தாகுக. இவ்வாவணம் பற்றித் தமது குறிப்புகளைத் தந்த பேராசிரியர் சாவித்திரி குணசேகராவுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

இத்திட்டத்தை நாம் ஏற்று நிறைவேற்றுவதற்கு மூலகாரணமாயிருந்து பண உதவி செய்த கனடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்துக்கு நாம் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம்.

இறுதியாக இக்கைந்நூலை வடிவமைத்து அச்சேற்றிய கருணாரத்ன அன்ட் சன்ஸுக்கும் எமது நன்றி.

**செல்வி திருச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CEDAW

**The Convention on the Elimination of All Forms of Discrimination Against Women** was adopted by the United Nations General Assembly on 18th December 1979.

The Convention entered into force as an international treaty on 3rd September 1981.

Sri Lanka ratified CEDAW on 5th October 1981.

## சீடோவைப் புரிந்துகொள்ளல்

மகளிர்க்கெதிரான அனைத்துப் பாகுபாடுகளையும் ஒழிப்பது குறித்த தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் 1979 டிசெம்பர் 18ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் 1981 செப்ரெம்பர் 3ஆம் திகதி ஒரு சர்வதேச உடன்படிக்கையின் வலுவைப் பெற்றது.

ஸ்ரீ லங்கா சீடோவை 1981 ஒக்ரோபர் 5ஆம் திகதி உறுதி செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## History

CEDAW was the result of over 30 years of work by the United Nations Commission on the Status of Women.

The UN Commission on the Status of Women was established in 1946 for two main purposes.

1. To monitor the situation of women
2. To promote women's rights

The Commission's work brought to light all the areas where women are denied equality with men.

CEDAW is the central and most comprehensive document that resulted through the work of the Commission.

## வரலாறு

மகளிர் அந்தஸ்து பற்றிய ஐக்கிய நாடுகள் ஆணையத்தின் 30 வருட உழைப்பின் பெறுபேறே சீடோ ஆகும்.

மகளிர் அந்தஸ்து பற்றி ஐ.நா. ஆணையம் 1946இல் இரு நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டது.

1. மகளிர் நிலைமையைக் கண்காணித்தல்
2. மகளிர் உரிமைகளை மேம்படுத்தல்

ஆண்களோடொத்த சமஉரிமை மகளிருக்கு மறுக்கப்படும் எல்லா விஷயப்பரப்புகளையும் ஆணையத்தின் பணி வெளிச்சம் போட்டுக் காட்டியது. ஆணையத்தின் பணியின் பெறுபேறான அதிமுக்கியத்துவம்வாய்ந்த விரிவான ஆவணம் '**சீடோ**' ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Contents of CEDAW

*Some Important facts . . .* **1**

*Preamble* **2**

**PART I**

*Article 1* **5**
Explanation of discrimination against women

*Articles 2 to 6* **7**
Responsibilities of countries when CEDAW is ratified

**PART II**

*Article 7* **9**
Women's Equal Right to participate in politics

*Article 8* **11**
Women's Equal Right to represent the government

*Article 9* **13**
Women's Equal Right to nationality

**PART III**

*Article 10* **15**
Women's Equal Right to education

*Article 11* **17**
Women's Equal Right to employment



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Article 12* **19**
Women's Equal Right to healthcare

*Article 13* **21**
Elimination of discrimination against women in the economy and social life

*Article 14* **23**
Rights of women in rural areas

**PART IV**

*Article 15* **25**
Equal Rights in law

*Article 16* **27**
Elimination of discrimination against women in marriage and family relations

**PART V**

*Article 17 to 30* **28**
Setting up of the Committee on the Elimination of Discrimination Against Women



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

*சீடோ பற்றிய சில முக்கிய உண்மைகள் . . .* 1

*முன்னீடு* 2

**பகுதி I**

*உறுப்புரை 1* 5
மகளிர்க்கெதிரான பாகுபாடு

*உறுப்புரைகள் 2 - 6* 7
அரசின் பங்கும் பொறுப்பும்

**பகுதி II**

*உறுப்புரை 7* 9
அரசியலில் பங்குபற்றுவதற்கான உரிமை

*உறுப்புரை 8* 11
அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமை

*உறுப்புரை 9* 13
தேசியத்துக்கான உரிமை

**பகுதி III**

*உறுப்புரை 10* 15
கல்வி பெறும் உரிமை

*உறுப்புரை 11* 17
வேலை பார்ப்பதற்கான உரிமை

*உறுப்புரை 12* 19
சுகாதாரம் பராமரிப்புப் பேணப்படும் உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உறுப்புரை 13*** **21**
பொருளாதார, சமூக வாழ்வுக்கான உரிமை

***உறுப்புரை 14*** **23**
கிராமப்புற மகளிர்

**பகுதி IV**

***உறுப்புரை 15*** **25**
சட்டத்தின் முன் சமத்துவம்

***உறுப்புரை 16*** **27**
திருமணத்திலும் குடும்ப உறவுகளிலும் சமத்துவம்

**பகுதி V**

***உறுப்புரைகள் 17 - 30*** **28**
மகளிருக்கெதிரான பாகுபாட்டை ஒழிப்பதற்கான செயற்குழுவை நிறுவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Some important facts on CEDAW

- CEDAW establishes an international Bill of Rights for women
- CEDAW brings women into the focus of human rights concerns
- CEDAW is committed to:
  Reaffirming faith in fundamental human rights
  Committing to the dignity and worth of the human person
  Recognizing and accepting the equal rights of men and women
- CEDAW spells out the meaning of equality and how equality can be achieved
- CEDAW sets out an agenda for action for countries to guarantee rights of women

## சீடோ பற்றிய சில முக்கிய உண்மைகள்

- மகளிர் உரிமைகளுக்கானதொரு சர்வதேச சாசனத்தை சீடோ உருவாக்குகிறது.
- மனித உரிமைகள் என்ற அம்சத்துக்குள் சீடோ மகளிரைக் கொண்டுவருகிறது
- அடிப்படை உரிமைகள் மீது வைத்துள்ள நம்பிக்கையை உறுதி செய்தல்
- தனிமனிதனின் கண்ணியத்தின் மீதும் பெறுமானத்தின் மீதும் நம்பிக்கை வைத்தல்
- ஆண் - பெண் சம உரிமைகளை இனங்காணல், ஏற்றல் ஆகியவற்றுக்கு சீடோ தன்னை அர்ப்பணித்துள்ளது.
- சமத்துவத்தின் அர்த்தத்தை சீடோ வரையறை செய்வதுடன், அதை எவ்வாறு அடையலாம் எனவும் தெளிவுபடுத்துகிறது
- மகளிர் உரிமைகளை உறுதிசெய்யும் நாடுகள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை நிகழ்ச்சி நிரல் ஒன்றை சீடோ விபரிக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Preamble

The Preamble to CEDAW sets the background.

The Preamble states that:

- All human beings are born equal
- All human beings are free and equal in dignity and rights
- All people are entitled to rights and freedoms

Yet, despite international instruments to safeguard rights, extensive discrimination against women continues. . .

Because of this, measures must be set in place to eliminate all forms of discrimination against women.

# முன்னீடு

சீடோவின் முன்னீடு பின்புலத்தை அமைக்கின்றது

- எல்லா மனிதரும் சமமாகவே பிறக்கிறார்கள்
- கண்ணியம், உரிமைகளைப் பொறுத்தவரையில் எல்லா மனிதர்களும் சுதந்திரமும் சமத்துவமும் உடையவர்கள்
- எல்லா மனிதர்களும் உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்கும் உரித்துடையவர்கள் என முன்னீடு கூறுகிறது.

ஆனால், உரிமைகளைப் பாதுகாக்க சர்வதேச ஏற்பாடுகள் இருந்தபோதும், மகளிருக்கெதிரான பரந்த பாகுபாடு தொடர்கிறது. இதனால் பெண்களுக்கெதிராக, சகல வடிவங்களிலும் காட்டப்படும் பாகுபாடுகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்படுவது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Articles
# உறுப்புரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Article 1

## "Discrimination Against Women"

Discrimination against women means -

Anything or any action that stops women from enjoying the human rights and freedoms (political, economic, social, cultural, civil and other fields of life) that men have.

# உறுப்புரை 1

## "மகளிருக்கெதிரான பாகுபாடு"

மகளிருக்கெதிரான பாகுபாடு என்பதன் பொருள் – ஆண்களுக்குள்ள மனித உரிமைகளையும் (அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, குடியியல் மற்றும் வாழ்க்கையின் பிற துறைகள் சார்ந்த) சுதந்திரங்களையும் அனுபவிக்கவிடாது மகளிரைத் தடுக்கும் எப்பொருளும் அல்லது எச்செயலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Article 2 to 6

## "The role and responsibility of States"

This Article is about what every country that accepts CEDAW must do.

Every country must -

- Make sure that the principle 'equality of women' is included in its Constitution and all its laws
- Create laws and regulations that remove unfairness and inequality that women face
- Accept that bringing up children must be done by both women and men
- Stop trafficking of women
- Stop exploiting women for prostitution

# உறுப்புரைகள் 2 - 6

## "அரசின் பங்கும் பொறுப்பும்"

இவ்வுறுப்புரை சீடோவை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு நாடும் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியது. ஒவ்வொரு நாடும்;

- மகளிருக்கு சமத்துவம் என்ற தத்துவம் தனது அரசியல் யாப்பிலும் எல்லாச் சட்டங்களிலும் உள்ளடக்கப்படுவதை உறுதி செய்யவேண்டும்.
- மகளிர் எதிர்நோக்கும் நியாயமின்மை, சமத்துவமின்மைகளை அகற்றும் கூட்டங்களையும் பிரமாணங்களையும் இயற்ற வேண்டும்.
- பிள்ளைகளை வளர்ப்பது ஆண், பெண் இருபாலாராலும் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- மகளிரை வாணிபப் பொருளாக்குவதைத் தடுத்தல்
- மகளிரை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதைத் தடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Article 7

**"Right to Political Participation"**

CEDAW accepts that women have the right ·

- To vote
- To take part in forming and taking forward government policies
- To be part of the government at all levels
- To join NGOs and associations working with public and political issues

## உறுப்புரை 7

**"அரசியலில் பங்குபற்றுவதற்கான உரிமை"**

- வாக்களிக்கவும்
- அரசாங்கக் கொள்கைகளை உருவாக்குவதிலும் முன்னெடுப்பதில் பங்குபற்றவும்
- எல்லா மட்டங்களிலும் அரசாங்கத்தில் பங்குபற்றவும்
- அரச சார்பற்ற நிறுவனங்களோடும், பொது மற்றும் அரசியற் பிரச்சினைகளில் ஈடுபடும் சங்கங்களோடும் இணையவும்

மகளிருக்கு உரிமையுண்டு என்பதைச் சீடோ ஏற்றுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Article 8

**"Right to Represent Government"**

CEDAW accepts that women have the right -

- To represent the country at international level

## உறுப்புரை 8

**"அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமை"**

- சர்வதேச மட்டத்தில் தம் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமை மகளிருக்குண்டு என்பதைச் சீடோ ஏற்றுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Article 9

**"Right to Nationality"**

CEDAW accepts that women have the right -

- To keep and change their nationality
- To grant their own nationality to their children

CEDAW also accepts that a woman must not be forced

- To change her nationality when she gets married to a man who is not a national of her own country
- To change her nationality when the husband changes his nationality

## உறுப்புரை 9

**"தேசியத்துக்கான உரிமை"**

- தமக்கென ஒரு தேசியத்தை வைத்திருக்கவும் மாற்றுவதற்கும்
- தமது சொந்தத் தேசியத்தைத் தமது பிள்ளைகளுக்குக் கையளிக்கவும்

மகளிருக்கு உரிமையுண்டு என்பதை சீடோ ஏற்றுக்கொள்கிறது.

- ஒரு பெண் தன் சொந்த நாட்டவரல்லாத ஆணைத் திருமணம் செய்யும் போது, தனது தேசியத்தை மாற்றும்படியோ
- கணவன் தன் தேசியத்தை மாற்றும் போது மனைவியும் தன் தேசியத்தை மாற்ற வேண்டும் என்றோ நிர்ப்பந்திக்கப்படக் கூடாது என்பதை சீடோ எற்றுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Article 10

**"Right to Education"**

CEDAW accepts that women have the right -

- To be educated. This means pre school, general education, technical, professional and university education.
- To have a career and vocational guidance
- To have the same curricula and examinations
- To have the same teachers, same standards, same school premises and same quality educational equipment
- To get scholarships and grants
- To do sports and physical education
- To learn about health and sex education
- To continue education without dropping out of school
- To study anything they wish, any subjects and programmes, teaching methods and text books without being told to do particular subjects or programmes because they are girls/women

## உறுப்புரை 10

**"கல்வி பெறும் உரிமை"**

- முன்பள்ளி, பொதுக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, தொழில்சார் மற்றும் பல்கலைக்கழகக் கல்வி ஆகியன பெறவும்
- ஒரு தொழிற்றுறையை ஏற்கவும் தொழில்வழிகாட்டல் பெறவும்
- ஒரே கலைத் திட்டத்துக்கும் ஒரே பரீட்சைகளுக்கும் உட்படவும்
- ஒரே தரத்திலான ஆசிரியர்கள், ஒரே தரத்திலான கல்வி ஒரே பாடசாலை வளாகம் மற்றும் ஒரே பண்புடைய கல்வி பெறவும்
- புலமைப் பரிசில்களையும் மானியங்களையும் பெறவும்
- விளையாட்டு, உடற்கல்வி ஆகியவற்றில் ஈடுபடவும்
- உடனலம் குறித்துக் கற்கவும் பாலியல் கல்வி பெறவும்
- பாடசாலையிலிருந்து விலகாது தொடர்ந்து கற்கவும்
- பெண்களாய் இருக்கும் காரணத்தால், சில குறிப்பிட்ட பாடங்களையும் நிகழ்ச்சிகளையும் செய்ய வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படாமல் தாம் விரும்பும் எந்தப் பாடங்களையோ, நிகழ்ச்சிகளையோ, கற்பித்தல் முறைகளையோ, பாடநூல்களையோ தெரிந்தெடுக்கவும் மகளிருக்கு உரிமையுண்டு என்பதைச் சீடோ ஏற்றுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Article 11

**"Right to Employment"**

CEDAW accepts that women have the right -

- To work
- To be paid the same as men who do the same work
- To enjoy the same opportunities at work
- To be selected along with men
- To choose a profession
- To be promoted, to have job security and receive training
- To have services on retirement, unemployment, sickness, old age or incapacity
- To be given health protection and safety
- To be able to enjoy special services on pregnancy and childbirth including childcare

## உறுப்புரை 11

**"வேலை பார்ப்பதற்கான உரிமை"**

- வேலை புரியவும்
- ஒரே வேலையைச் செய்யும் ஆண் பெறும் அதே ஊதியத்தைப் பெறவும்
- வேலை புரிகையில் ஒரே வாய்ப்புகளை அனுபவிக்கவும்
- ஆண்களோடு ஒத்து, தெரிவுசெய்யப்படவும்
- ஒரு தொழிலைத் தெரிவு செய்யவும்
- பதவி உயர்வு பெறவும், வேலைப் பாதுகாப்புப் பெறவும், பயிற்சி பெறவும்
- ஓய்வு வேலையின்மை, நோய், முதுமை, ஆற்றல் இழப்பு நேருங்கால் உரிய சேவைகள் பெறவும்
- சுகாதாரப் பாதுகாப்பும் பொதுப் பாதுகாப்பும் பெறவும்
- கர்ப்ப காலத்திலும், மகப்பேற்றின் போதும், பிள்ளைப் பராமரிப்புக் காலத்திலும் சிறப்புச் சேவைகளை அனுபவிக்கவும்

மகளிருக்கு உரிமையுண்டு என்பதைச் சீடோ ஏற்றுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Article 12

**"Right to Healthcare"**

CEDAW accepts that women have the right -

- To healthcare services
- To family planning services
- To support in pregnancy and child birth

## உறுப்புரை 12

**"சுகாதாரம் பேணப்படும் உரிமை"**

- சுகாதாரம் பேணும் சேவைகளுக்கும்
- குடும்பத்திட்ட சேவைகளுக்கும்
- கர்ப்ப காலம் மற்றும் மகப்பேற்றுக்கால ஆதரவுக்கும்

மகளிருக்கு உரிமையுண்டு என்பதைச் சீடோ ஏற்றுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Article 13

**"Right to Economic and Social Life"**

CEDAW accepts that women have the right -

- To family benefits
- To bank loans, mortgages and other financial credit
- To participate in recreational activities, sports and cultural life

## உறுப்புரை 13

**"பொருளாதார, சமூக வாழ்வுக்கான உரிமை"**

- குடும்ப சகாயங்களுக்கும்
- வங்கிக்கடன், ஈடு, மற்றும் பொருளாதார வாய்ப்புக்களுக்கும்
- ஓய்வுநேரச் செயற்பாடுகள், விளையாட்டு மற்றும் கலாசார வாழ்வுக்கும்

மகளிருக்கு உரிமையுண்டு என்பதைச் சீடோ ஏற்றுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Article 14

**"Rural Women"**

CEDAW accepts that rural women have the right -

- To have their special problems solved
- To be treated as equal
- To enjoy rural development, planning and implementation
- To enjoy healthcare services
- To enjoy education and training
- To be free to form self help groups
- To participate in community activities
- To obtain loans and credit
- To reach markets and technology
- To have housing and sanitation facilities

## உறுப்புரை 14

**"கிராமப்புற மகளிர்"**

- தம்முடைய விசேட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும்
- சமமாக நடத்தப்படவும்
- கிராம அபிவிருத்தி, திட்டமிடல், மற்றும் அமுலாக்கல் நலன்களை அனுபவிக்கவும்
- சுகாதாரம் பேண் சேவைகளை அனுபவிக்கவும்
- கல்வி மற்றும் பயிற்சியை அனுபவிக்கவும்
- சுய உதவிக் குழுக்களை அமைக்கும் சுயாதீனம் இருக்கவும்
- சமுகம்சார் செயற்பாடுகளில் பங்குபற்றவும்
- கடன் வசதிகள் பெறவும்
- சந்தை வாய்ப்புக்களையும், தொழில்நுட்ப வாய்ப்புகளையும் அடையவும்
- வீடமைப்பு சுகாதார வசதிகள் பெறவும்

கிராமப்புற மகளிருக்கு உரிமையுண்டு என்பதைச் சீடோ ஏற்றுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Article 15

**"Equality in Law"**

CEDAW accepts that women have the right -

- To be treated as equal by the laws of the country
- To be treated as equal by legal procedures
- To sign contracts
- To buy and sell property
- To have the equal legal right to choose where to live

## உறுப்புரை 15

**"சட்டத்தின் முன் சமத்துவம்"**

- நாட்டின் சட்டங்களால் சமமாக நடத்தப்படவும்
- சட்டபூர்வமான நடைமுறைகளால் சமமாக நடத்தப்படவும்
- ஒப்பந்தங்கள் கைச்சாத்திடவும்
- சொத்துக்களை வாங்கவும் விற்கவும்
- தாம் எங்கே வாழவேண்டும் என்பதைத் தீர்மானிக்கச் சமமான உரிமை வைத்திருக்கவும்

மகளிருக்கு உரிமையுண்டு என்பதைச் சீடோ ஏற்றுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Article 16

**"Equality in Marriage and Family Relations"**

CEDAW accepts that a woman has the right -

- To choose her own partner
- To have the same rights as her husband in marriage and children
- To decide when and how many children to have
- To choose a family name
- To choose a profession and occupation
- To own and enjoy property

## உறுப்புரிமை 16

**"திருமணத்திலும் குடும்ப உறவுகளிலும் சமத்துவம்"**

- தமக்கு ஒரு துணைவரைத் தேர்ந்தெடுக்கவும்
- மணவாழ்வில் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கும் அதே உரிமைகளைக் கொண்டிருக்கவும்
- எப்பொழுது, எத்தனை பிள்ளைகள் பெறுவது என்று தீர்மானிக்கவும்
- ஒரு குடும்பப் பெயரைத் தெரிவுசெய்யவும்
- ஒரு தொழிலைத் தெரிந்தெடுக்கவும்
- சொத்தை ஆண்டு அனுபவிக்கவும்

மகளிருக்கு உரிமையுண்டு என்பதைச் சீடோ ஏற்றுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Article 17 to 30

This set of articles in Part V and VI of CEDAW relates to procedures, administration and responsibilities of governments in relation to CEDAW.

*Part V looks at:*

- The setting up of a Committee on the Elimination of Discrimination Against Women (more commonly known as the CEDAW Committee)

The CEDAW Committee has 23 experts (in the areas covered by CEDAW) from countries that have signed CEDAW. They are selected by secret ballot and CEDAW provides details of how the election should be done. The members will be in office for four years and their primary task will be to look into reports on measures undertaken by countries to fulfil the CEDAW obligations.

*Part VI:*

CEDAW places responsibility on governments to take action to achieve all rights enshrined in CEDAW. This Part also sets out procedures for countries to ratify CEDAW.

## உறுப்புரைகள் 17 - 30

சீடோவின் ஐந்தாம் ஆறாம் பகுதிகளில் உள்ள இவ்வுறுப்புரைகளின் தொகுதி நடைமுறை நிர்வாகம், சீடோ தொடர்பாக அரசாங்கத்தின் பொறுப்புக்கள் ஆகியவை பற்றியது.

***ஐந்தாம் பகுதி***

- மகளிருக்கெதிரான பாகுபாட்டை ஒழிப்பதற்காக ஒரு செயற்குழுவை (இது பொதுவாக சீடோ குழு என அழைக்கப்படும்) நிறுவுதல் பற்றியது.

சீடோவில் கையொப்பமிட்ட நாடுகளைச் சேர்ந்த 23 நிபுணர்கள் சீடோ குழுவில் இருப்பர். இவர்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவர். (இத்தெரிவு எப்படி நடத்தப்பட வேண்டும் என சீடோ விபரித்துள்ளது). இவ்வுறுப்பினர்கள் நான்கு ஆண்டுகள் பதவியில் இருப்பர். சீடோவுக்குரிய கடப்பாடுகளை நிறைவேற்றக் கையொப்பமிட்ட நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகளை ஆராய்வது இவர்களுடைய முக்கிய கடமை ஆகும்.

***ஆறாம் பகுதி***

சீடோவில் பொதிந்துள்ள எல்லா உரிமைகளையும் நிறைவேற்றும் பொறுப்பைச் சீடோ அரசாங்கங்கள் மீது விதிக்கிறது. நாடுகள் சீடோவை உறுதி செய்வதற்கான நடைமுறைகளையும் விபரிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Women's Education and Research Centre (WERC)

Our mission is to achieve equality for women in all spheres of life selectively subscribing to such values as secularism, pluralism and social democracy.

We aspire to:

- Study and research women's subordination and thereby raise the consciousness of men and women at the level of society and act as a tool for policy changes at the level of the State.
- Promote the rights of women mainly among marginalized groups with projects for rehabilitation, poverty alleviation and economic empowerment.
- Provide a forum of expression for women writers to share their experiences towards a meaningful dialogue.
- Assist and cooperate with other women's organizations locally and internationally in their struggle for gender equality.
- Update the Resource and Documentation Centre as a full-fledged member of the Global network of research and study centres on gender studies in the third world.
- Lobby with the State and the Non-State actors towards eradication of gender discrimination while becoming the agents for the policy change and implementation.

Women's Education and Research Centre
58, Dharmarama Road
Colombo 6.

## பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் (WERC)

வாழ்க்கையின் சகல துறைகளிலும் மகளிருக்கு சமத்துவம் கிடைக்கப் பாடுபடுதலும், மதச் சார்பின்மை, பன்முகத் தன்மை, சமூக ஜனநாயகம் ஆகிய விழுமியங்களை ஏற்றலும் எமது நோக்கமாகும்.

- மகளிருடைய இரண்டாந்தர நிலையை ஆராய்வதன் மூலம் சமூக மட்டத்தில் ஆண், பெண் இருபாலாரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் அரசுகள் மட்டத்தில் கொள்கை மாற்றத்தை ஏற்படுத்தும் கருவியாகச் செயற்படலும்
- புனர்வாழ்வு, வறுமையொழிப்பு, பொருளாதார வலுவேற்றல், கருத்திட்டங்கள் மூலம், குறிப்பாக சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் இடையே மகளிர் உரிமைகளை முன்னெடுத்தலும்
- பெண் எழுத்தாளரின் கருத்து வெளிப்பாட்டுக்கு ஓர் அரங்கு அமைப்பதன் மூலம் ஓர் அர்த்தமுள்ள கருத்துப் பரிமாற்றத்துக்கு இட்டுச் செல்லக்கூடிய விதத்தில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல்
- பால் சமத்துவத்துக்காகப் போராடும் சர்வதேச மற்றும் உள்நாட்டு மகளிர் அமைப்புகளோடு ஒத்துழைத்தலும் உதவுதலும்
- மூன்றாம் உலகில் பால் ஆய்வுகளில் ஈடுபடும் சர்வதேச மற்றும் உள்நாட்டு மகளிர் அமைப்புகளோடு ஒத்துழைத்தலும் உதவுதலும்
- மூன்றாம் உலகில் பால் ஆய்வுகளில் ஈடுபடும் ஆய்வு மையங்களின் உலகளாவிய வலைப்பின்னலில், முழுமையான உரிமையுடைய அங்கத்தவராவதன் மூலம் மூலவளம் மற்றும் ஆவணப்படுத்து மையத்தை நவீனமயப்படுத்தலும்
- கொள்கை மாற்றம் மற்றும் அமுலாக்கல் முகவர்களாகும் அதேவேளை, பால்பாகுபாட்டை ஒழிப்பதற்காக அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் ஆதரவை நாடிப் பெறலும் எங்கள் அபிலாஷைகள் ஆகும்.

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
58, தர்மராம வீதி
கொழும்பு 6

ISBN 955-9261-28-2

Printed by Karunaratne & Sons Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org